ධීවර අමාත්‍යාංශය

கடற்றொழில் அமைச்சு

# Ministry of Fisheries



# වාර්ෂික වාර්තාව

වருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT
# 2016

## ලංකා ධීවර සංස්ථාව

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

## Ceylon Fisheries Corporation

<u>பொருளடக்கம்</u>


- இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தை நிலைப்பித்தல் மற்றும் சட்டவிதி **40-41**
- சங்கமித்த தகவல்கள் **42-43**
- நோக்கம் மற்றும் நடவடிக்கை **44**
- இலங்கை கடற்றொழில் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கு கொடுக்கப்பட்டும் கடிதம் **45**
- தலைவரின் மீளாய்வு **46-48**
- பணிப்பாளர் சபையின் அறிக்கை **49-52**
- கணக்காய்வாளரின் அறிக்கை **53-61**
- கணக்காய்வாளரின் அறிக்கைக்குறிய பதில் கடிதம் **62-66**
- நிதிக் கூற்றரிக்கை **67**
- விரிவான வருமான அறிக்கை **68**
- பணப்புழக்க அறிக்கை **69**

வெகுஜன மாற்ற அறிக்கை **70**

- கணக்கு குறிப்பீடு **71**
- முக்கிய கணக்குக் கொள்கைக்கான சுருக்கம் **72-78**
- விகிதப் பகுப்பாய்வு **79**
- பனியாளர் விவர அறிக்கை **80**

## இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தை நிலைப்பித்தல் மற்றும் சட்டவிதி

1957 இல் 49 ஆம் இலக்கம் கொண்ட தொழிற்துறை சட்டக் கூட்டுத்தாபன ஒழுங்கின் கீழ் 1964 ஆம் வருடத்தின் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் நிருவப்பட்டதுடன், வர்த்தக நடவடிக்கை 1965 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூலாரம்பத்தில் கூட்டுதுதாபன நோக்கங்களில் மொத்த கடற்றொழில் துறையெயும் சுவிகறிக்கப்பட்டது. கீழ் கானப்படும் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கங்கள் 1964.10.01 திகதியிலான 14186 இலக்கம் கொண்ட இலங்கையரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிக்கப்பட்டுள்ளது.

1. கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக மற்றும் அதிகாரம் பெற்ற முகவர் மூலம் ஆழ் கடலில் இழுவை படகின் மூலம் மீன் பிடித்தல்.

11. கூட்டுத்தாபனத்தினால் நேரடியாகவோ அதிகாரம் பெற்ற முகவர் மூமோ மீன் தயாரித்தல், தகரத்திலடைத்தல், உழர்த்தல் மற்றும் தயாரித்தல், மற்றைய மீன் உற்பத்தி நடவடிக்கை.

111. கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக மற்றும் அதிகாரம் பெற்ற முகவர் மூலம் மீன் மொத்தமாக அல்லது சில்லரையாக விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தலித்தல்.

iv. குளிரூட்டல் உல்லடக்கிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் தலங்கள் அமைத்தலும் பராமரித்தலும்.

v. மீன் மற்றும் மீன் உற்பத்திகள் ஏற்றுமதி இறக்குமதி செய்தல்.

vi. மீன்பிடி துறைக்கான பிடிமானங்கள் உபகரணங்கள் மற்றும் வேரு தேவையான உபகரணங்கள் இறக்குமதி செய்தலும் விற்பனை செய்தலும்.

vii. மீன்பிடி தினைக்களமோவேரு அரச தினைக்களத்திற்கான மீன்பிடி துறை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்

viii. மீன்பிடி துறைக்கான படகுகள் மற்றும் வேரு யாத்திரைகள் தயாரித்தல்.

ix. மீன்பிடி படகுகள் புதுப்பித்தலும் பராமறித்தல் வசதிகள் வழங்குதல்.

x. மீன்பிடிக்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்திச் செய்தலும் விற்பனைச் சைய்தலும்.

இந்த நோக்கத்தின் சிலதை தற்போது துன்டிக்கப்பட்டுள்ளதென குறிக்கப்பட வேன்டும். ஆனாலும் மேற்குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட wxl (v) குறியின் நோக்கம் 2011.06.30 திகதியிலான மற்றும் இலக்கம் 1712/21 கொன்ட அதி விஷேட வர்த்தமானி பத்திரத்தினால் மீள் திருத்தம் செய்வதுடன் கீழ் கானும் நோக்கம் இனைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துல்லது.

I. சுய வழங்கள் வட்டம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சருவதேச சட்டங்களுக்கு அமைவாக அதன் வெளியில் மீன் பிடி செயற்பாடுகளில் ஈடுபடல்.

11. மீன் தயாரிக்கும் வசதிகளை வழங்குதல்.

111. உழ்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் மீன் விற்பனை செய்தல்.

iv. அவசியபடும் சந்தர்பங்களில் மீன் மற்றும் மீன் உற்பத்திகள் ஏற்றுமதி இறக்குமதி செய்தல்.

v. மேற்கூறிய நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இனைந்து வர்த்தக ஒப்பந்தங்களை மேறகொள்தல்.

vi. உழ்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் பகிர்வாளர்களை பிரதிபலித்தல்.

மேல் கூறிய மீளமைத்த ஆறு நோக்கங்களின் தற்போது இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் முன்கட்ட வர்த்தக நடவடிக்கை 04 நடத்தப்பட்டு வருகிறது.

1. குளிரூட்டப்பட்ட சுற்றிய மீன்கள் விற்பனை.
2. நாடு முழுவதும் வியாபார வசதிகளை மேம்படுத்தி மீன் விற்பனயை வளர்ச்சிச் செய்தல் .
3. **ஐஸ்** வழங்குதல் மற்றும் குளிரூட்டளரை வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
4. பனி வழங்கல் மற்றும் குளிர்கால சேமிப்பு வசதிகளை வழங்குதல்.

## <u>சங்கமித்த தகவல்</u>

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் பெயர் | - | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் |
| சட்ட சுபாவம் | - | அரச கூட்டுத்தாபனம் |
| அமைக்கப்பட்ட திகதி | - | 1957 இலக்கம் 49 கொன்ட அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபன ஒழுங்குவிதியின் கீழ் 1964 ஒக்ட்டோம்பர் 01 ஆம் திகதி |

**பணிப்பாளர் சபை -**

| | | |
|---|---|---|
| திரு துசித்த பிரியதர்ஷன அலுத்பட்டபெந்திகே | - | தலைவர் 2016.01.01 இருந்து 2016.07.01வரை |
| திரு எஸ். பாலசுப்பிரமனியம் | - | தலைவர் 2016.07.15 இருந்து 2016.08.31 வரை |
| திரு பீ. கே..ஜகத் குமார பெரேரா | - | தலைவர் 2016.09.06 இருந்து |
| திரு என்.டப்.பீஜே.சனத் சிரிமால் பெரேரா | - | உப தலைவர் 2016.01.01 இருந்து 2016.03.24 வரை |
| திரு ஞானவன்ச வீரதுங்க | - | முகாமைத்துவ பனிப்பாளர் 2016.01.01 இருந்து |
| திரு பீ.ஏ. சிறிநிமல் பெரேரா | - | முகாமைத்துவ பனிப்பாளர் 2016.09.08 இருந்து |
| திரு என்.பீ.கே.ரணவீர | - | பனிப்பாளர் 2016.04.18 இருந்து |
| திரு ஜீ.எஸ். பீ.லால் பிரேமநாத் | - | பனிப்பாளர் 2016.04.18 இருந்து 2016.07.01 வரை |
| திரு ஜீ. அசோக விஜேரத்ன | - | பனிப்பாளர் 2016.04.18 இருந்து |
| திரு எம்.ஜீ. சுமனசிங்க | - | பனிப்பாளர் திறைசேரி பதிலாளர் |
| திரு கொலீன் சீ முதுமால | - | பனிப்பாளர் 2016.01.01 இருந்து 2016.03.24 வரை |

**சிரேஷ்ட முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| திரு நிலான் கிரிஸாந்த மிரென்டா | - | பொது முகாமையாளர் |
| திரு ஏ. சுஜீவ சாமிக சில்வா | - | பதில் பொது முகாமையாளர் நிதி |
| திரு தலம்கித் புஸ்செல்ல | - | பதில் பொது முகாமையாளர் நிதி |
| திரு ஏ.ஜே. சிந்தா குமுதுனீ | - | நிதி முகாமையாளர் வே.பா. |
| திரு டீ.சீ. கருநாதிலகே | - | தலைமை உள்ளக கணக்காய்வாளர் |
| திரு கே.வீ.எச்.பண்டாரநாயக | - | சட்ட அதிகாரி / பனிப்பாளர் சபைச் செயலாளர் |
| திருமதி டீ. அனீஷா பிரனாந்து | - | சேவையாளர் சபை முகாமையாளர் வே.பா. |

| | |
|---|---|
| பதிவு அலுவலகம் | - இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,கொழும்பு 15. |
| கணக்காய்வாளர்கள் | - தலைமை கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | - இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

# <u>நோக்கம்</u>

கடற்றொழில் உற்பத்தியாளரினதும் நுகர்வினர்களினதும் நலங்களுக்காக கடற்றொழில் உற்பத்திக்கும் விற்பனை விருத்திச் செய்வது மற்றும் வழிகாட்டுதலின் முன்னோடியான வர்த்தக நிருவனமாக நடத்தல்.

# <u>நடவடிக்கை</u>

- விலைப்பயன் கொண்ட அமைப்பாக தேசீய உற்பத்திக்கு அன்னலவாக ஆகக் கூடிய பங்களிப்பை வழங்குதல்.

- மீன் உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை ஆகியவைகளுக்கு பொருப்புடைய மற்றும் கவனத்தில்கொன்ட முக்கிய அர்த்தமுள்ள நிரிவனமாக திகலுதல்.

- கடற்றொழிலாளர்களின் பொருளாதார இயலுமையை திடப்படுத்தல் மற்றும் அதன் உற்பத்தி கொள்ளலவை மேலோங்குதல் மூலம் உயர் அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்தல்.

- நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி சாதாரன விலையிள் உயர்தரத்திலான மீன்கள் மற்றும் பெருமதி சேர்கப்பட்ட உற்பத்திகளின் உற்பத்தி நடவடிக்கைகளிலும் விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

- நுகர்வினர்களினது புரோடீன் தேவைகளுக்கு மேலதிக உதவி வழங்குதல்.

திரு கடற்றொழில் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கு வழங்கப்படும் கடிதம்

இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,

கொழும்பு 15.

2021.11.15

திரு டக்லஸ் தேவாநந்த அவர்கள்,
கடற்றொழில் மற்றும் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சு
புதிய செயலாளர் காரியாளயம்,
கொழும்பு - 10

திரு அமைச்சரவர்ளே,

1971 இலக்கம் 38 உரிய நிதி சட்டத்தின் 14 (2) (இ) வதந்தி மற்றும் 1957 இலக்கம் 49 உரிய அரச வர்த்தக நீதிச்சட்ட கூட்டுத்தாபன சட்டத்தின் 30(1) வதந்தி படி நான் 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியின் முடிந்த வருடத்திற்கான வருடாந்த அறிக்கையை இத்துடன் சமர்பிற்கிறேன்.

1. பனிப்பாளர் சபைச் அறிக்கை
2. 2016 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை கூற்று.
3. 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிந்த வருடத்திற்கான விகித வருமான கூற்று மற்றும் நிதி பாய்ச்சல் கூற்று.
4. 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிந்த வருடத்திற்கான கணக்காய்வாளராதிபதியின் அறிக்கை.
5. கணக்காய்வாளராதிபதியின் அறிக்கைக்கான இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தினால் வழங்கபட்ட பதில்.

இந்த அறிக்கை அமைச்சர் மன்றத்தில் அனுமதி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்குமாரு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
விசுவாசமுள்ள,

தலைவர்
இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்

# தலைவரின் மீளாய்வு

இலங்கை அரசின் பூரண கன்காணிப்பு மற்றும் வழிகாட்டலூட்டப்படும் மீன் விநியோகத்தின் ஈடுபடும் முக்கிய மற்றும் ஒரே அரச நிருவனமாக இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் திகல்கின்றது. கடற்றொழில் பிரஜைகளின் வாழ்வாதாரத்தை உயர்துவதற்கு பங்களிப்பு வழங்கி, நுகர்வோர் மக்களுக்கு சாதாரன விலைக்கு மீன்களை வழங்குவதற்க்கு ஏற்ப சூலளை நிர்மானித்தல் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் முக்கிய அபிப்பிராயமாகும். சமூகத்தின் எல்லா பிரஜைகளுக்கும் தங்கள் வருமானத்திற் கேற்ப மீன்கள் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தல், மக்களின் புரோட்டீன் அவசியங்ளைப் பூரணப்படுத்துவதன் மூலம் வாழ்வாதார செலவினை குறைத்து நல்ல சுகாதாரம்பெற்ற குடும்பங்களை உருவாக்குவதற்கு மீன் விற்பனையின் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களை அதிகறிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மீன் விற்பனையில் ஈடுபடம் ஒரே அரச நிருவாகமாக இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்க்கு விஷேட பொருப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மீன் வீநியோகம் திரப்பு சநதையில் போட்டித்தன்மையினால் தீர்மானிக்கப் படுவதால் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவ உபாயமான விலைக் கொழ்கை, உபகரண (மீன் வகைகள்) பிரபேதங்கள், சந்தை வேருபாடுகள்,விற்னை லைகளின் வளர்ச்சி நடவடிக்க்கள் ஆகியவை முகாமைத்துவ உபாய வழிகளை சந்தை வெற்றிகளுக்காகவெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டுள்ளது.

## 1 மீன் கொள்முதல் மற்றும் விற்பனை

மீனவ பிரஜைகளின் மீன் அருவடையைநேரடியாக கூட்டுத்தாபனத்திற்கு கொள்முதல் செய்ய முடிந்தால் நல்ல விலையை அவர்களுக்கு வழங்க முடியும். அத்தோடு அதனூடாக நுகற்வோர்களுக்கு தரத்திலுயர்ந்த மீன்கள் கறைந்த விலைக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். இது கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கு நேறடி தாக்கம் ஏற்படுத்தும். யாழ்பானம், பேசாலை, பருத்தித்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் மீன் அருவடயை கொள்முதல் செய்வதை முறையாக பரப்புவது மற்றும் அப் பிரதேசங்களின் வாழும் மீனவ பிரஜைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்க்கு மீனவ கிராமங்களுக்கு சென்று மீனவ பிரஜைகளை சந்தித்து கழந்துறையாடி முன்னேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தோடு வருடத்திற்க்குள் புதிய மீன்கள் விநியோகிக்கும் நிலையங்கள் நிருவித்து கூட்டுத்தாபனத்தின் மீன் கொள்முதலை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக 2016 வருடத்திற்க்குள் மெட்ரிக்ரொன் 3619 மீன் தொகயை கூட்டுத்தாபனத்தினால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பேலியாகொடையில் நவீன அங்கங்களையும் சிறந்த வசதிகளையும் கொன்ட நவீன மத்திய மீன் சந்தை கட்டிடத் தொகுதியை கடற்றொழில் மற்றும் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சின்நேறடி வழிகாட்டலிளும் ஆசிர்வாதத்திலும் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ கட்டத்தினால் கட்டுப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் முகமைத்துவ நடவடிக்கைகள் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தினால்

மேற்கொள்ளப்படும். அதேபோல் அதில் இயங்கும் கட்டி ஐஸ் இயந்திரகமும் குளிரூட்டலரையும் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தினத்தின் கன்காணிப்பின் கீழ் நடத்தி வருகிறது.

2016 ஆம் வருடத்தின் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு அதன் விற்பனை நிலையங்கள், நடமாடும் விற்பனை வண்டிகள், லங்கா சதொச மற்றும் அரச வைத்தியசாலைகளுக்கு மீன் விற்பனை செய்தல் ஆகியவைகளின் மெ.தொ.3847 மீன் தொகை விற்னைசெய்ய முடிந்துள்ளது.

**2.** <u>**ஐஸ் உற்பத்தியும் விநியோகமும்**</u>.

இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனத்தினத்தின் இன்னுமொரு வருமானமீட்டும் பிரிவாக ஐஸ் உற்பத்தியும் விநியோகமும் விற்பனையும் அனுராதபுரம், காலி, ஹம்பாந்தொட்டை,பேலியகொடை ஆகிய ஐஸ் இயந்திரகங்களின் உற்பத்தியின் 9759 மெ.தொ. ஐஸ் தொகை விற்பனயை நெருங்கியுள்ளது.

3. <u>**மீன் தகரத்திலடைக்கும் செயற்திட்டம்.**</u>

இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனத்தினமும் ஹெப்பி குக் புட்ஸ் லங்கா தனியார் நிருவனத்தோடு இனைந்த செயற்த்திட்டமாக காலி இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபன வட்டாரத்தில் நடத்தி வரும் தகரத்திலடைக்கபடும் மீன் உற்பத்தி நிலையம் CEYFISH வியாபாரப் பெயரின் கீழ் உற்பத்திகள் நடந்து வருகிறது.

**சேவைகள்**

4. <u>**குளிரூட்டலரை வசதிகளையும் பதப்படுத்தல் வசதிகளும் வழங்கள்**</u>.

மோதரையில் அமைந்த பிரதான குளிரூட்டலரை கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனையின் மர்மச் தானமாகும். அத்தோடு குளிரூட்டலரை வசதி கூட்டுத்தாபன நிலையங்களுக்கு மட்டுமல்லாமல் தனியார் பிரிவிற்க்கும் வழங்கப்பட்டது.

5. <u>**சுற்றுலா விடுதி வசதிகள்**</u>

நுரெலியா, கலமெட்டிய, மின்னேரியா ஆகிய நகரங்களில் அமைந்த கூட்டுத்தாபத்திற்கு சொந்தமான நவீன வசதிகளைக் கொன்ற சுற்றுலா விடுதிகளினால் கவர்ச்சியான அனுபவமுள்ள சேவையாளர்களினூடாகபாது மக்களுக்கு சிரந்த சேவயை வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

6. <u>**இலாப நட்டம்**</u>

மீளாய்வு வருடத்தின் கூட்டுத்தாபத்தின் மொத்தச் செயற்பாடுளின் 247ரூபா மில்லியன் தேறிய இலாபம் குறித்துள்ளது. கடந்த வருடத்தின் நட்டம் 259.9 ரூபா மில்லியனாகும்.

தலைவர்

# பணிப்பாளர் சபையின் அறிக்கை

2016 டிசெம்பர் 31 திகதியில் முடிந்த வருடத்திற்காக வருடாந்த அறிக்கை அக் காலத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுடன் இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனத்தினத்தின் பணிப்பாளர் சபை மிக மகிழ்ச்சியுடன் வழங்கியுள்ளது.

இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனம் 1957 இலக்கம் 49 ஆம் அரச வர்த்தக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1964 ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனம் கடற்றொழில் மற்றும் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கண்கானிப்பின் கீழ் நடத்தி வருவதுடன் கூட்டுத்தாபனத்தினால் 2016 வருடத்திற்க்குள் நடத்தி வந்த காரியங்கள் கீழ் வருமாரு சுருக்கி கான்பிக்களாம்.

- உள்நாட்டில் மீன் கொள்முதல்செய்தல்.
- மொத்த மற்றும் சில்லரை அடிப்படையில் மீன் கொள்முதல் செய்தல்.
- மீன் உப உற்பத்திகள் கொள்முதல் மற்றும் விநியோகித்தல். අයිස් නිෂ්පාදනය සහ අලෙවිය.
- குளிரூட்டல் வசதிகள் வழங்குதல்.
- CEYFISH எனும் விநியோகப் பெயரின் கீழ் தகரத்திலடைத்த மீன் விநியோகம்.

## <u>வியாபார நடவடிக்கை மீளாய்வு</u>

கூட்டுத்தாபனத்தின் மொத்த செயறபாடு நடவடிக்கைகளை பற்றினைத்து தகவல் உள்ளடக்கிய தலைவரின் மீளாய்வு இந்த பணிப்பாளர் சபையின் அறிக்கையின் முக்கிய பகுதியாக கருத வேண்டும்.

## <u>நிதி அமைப்பு</u>

கடந்த வருடங்களுக்குள் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் ரூபா மில்லியன் இரண்டிற்கு மேலானாலும் 2015 ஆம் வருடத்தை விட 2016 ஆம் வருடத்தில் மொத்த வருமானம் ரூபா மில்லியன் 257 ஆக கூட்டக்கொள்ள முடிந்ததுடன் முடிந்த வருடத்தை ஒப்பிடுகையில் மொத்த வருமானத்தின் கறைவு கானப்படுகின்றத. இனையதலங்களின் விற்பனை குறைதல் மற்றும் தற்காலீக சேவகர்களை ஒரேதறத்தில் நிறந்தரப்படுத்தலும் 2015 வறவுசெலவு திட்டத்தின் ரூ.10,000/- மாக சம்பலம் உயர்தப்படுத்தல் காரணமாக நடவடிக்கை செலவின் வளர்ச்சியால் மீளாய்வு வருடத்தின் நட்டத்தின் அதிகறிப்பை கானப்படுகிறது.மொத்த்தேறிய இலாப நட்டத்தை கவணத்தில் கொள்கையில் 2013, 2014, 2015 ஆகிய வருடங்களை வரிசையாக ரூபா மில்லியன் 54, 45, 119.19 , ..... ஆனதுடன் 2016 வருடத்தில் ரூபா மில்லியன் 259.9 ஆகதேறிய நட்டத்தின் குறைவு காட்டுகிறது. ,

**பணிக் குழு**

| | | |
|---|---|---|
| நிறைவேற்று அலுவலர் | - | 66 |
| காரியாலய அலுவலர் பயிலுனர் | - | 415 |
| பொறியியல் தர அலுவலர் | - | 226 |
| சிற்றூழியர்கள் | - | 413 |
| | | 1120 |

**நலனோம்பு நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| மீளச்சேவையில் ஈடுபடுத்திய தொகை | - | 02 |
| சேவை நிருத்தப்பட்டவர்களின் தொகை | - | 11 |

**நிறைவேற்பு தரத்திறக்கு வேலையில் சேர்த்தல்**

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர் | - | 01 |
| பதில் முகாமையாளர் நிதி | - | 01 |

**நிறைறவேற்று தரத்தின் சேவையிலிருந்த விளகுதல்**

| | | | |
|---|---|---|---|
| ராஜினாமா செய்தல் | - | நிருவாக முகாமையாளர் | -01 |
| | | முகாமையாளர் iv தரம் | -01 |
| ஓய்வுப் பெறுத்தல் | - | நிருவாக முகாமையாளர் | -01 |

**ஒப்பந்தத்திற்கு பனிப்பாளர்கள் நியமித்தல்**

இலங்கை மீன் பிடி கூட்டுத்தாபனத்தின்செயற்பாடு நடவடிக்கைகளுக்கான எந்த ஒப்பந்தம் சம்பந்தமாக பனிப்பாளர்களின் எந்த சம்பந்தமும் இல்லை என கூறிக்கொள்கிறேன்.

**நன்றி நவிலல்.**

கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சியை வெற்றிகரமாகுவதற்கான கடற்றொழில் மற்றும் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் வழங்கப்பட்ட எல்லா உபதேசங்களையும், ஒத்துளைப்புகளையும் வழிகாட்டல்களையும் பற்றி கூட்டுத்தாபனத்தின் பனிப்பாளர் பை தங்நள் நன்றயைத் தெரிவித்துக்கொள்கிறது. கடற்றொழில் மற்றும் நீரக வலமூளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட எல்லா அலுவலர்களினாலும் வழங்கப்பட்ட ஒத்துலைப்பை பற்றி பனிப்பாளர் சபையினால் மனப்பூர்வமாக புகழப்படுகிறது. இந்த வருடத்திற்குள் எமக்களித்த ஒத்துலைப்பை பற்றி நிதி அமைச்சினும் திறைச்சேறியினதும் எல்லா அலுவலர்களுக்கும் எமது நன்றியைத் தெறிவித்துக் கொள்கின்றோம்.

எமது பெருமதிமிக்க வழங்கள் பனியாளர்கள் என்பதால் வருடம் முழுவதும் அவர்கள் வழங்கிய ஒத்துலைப்பிற்காக மொத்த பனியாளர் மன்றத்திற்கும் எமது நன்றியை தெறிவித்துக்கொள்கின்றோம்.

எமது பெருமதிமிக்க நுகர்வோர்களுக்கும் அரச நிருவனங்களுக்கும் பனிப்பாளர் மன்றத்தினால் தங்கள் நன்றியை தெறிவித்துக் கொள்வதுடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளினால் எப்போதும் எமக்களித்த ஒத்துலைப்பையும் நம்பிக்கையையும் பற்றி இலங்கை வங்கிக்கும் , மக்கள் வங்கிக்கும் விஷேட நன்றியை தெறிவித்துக்கொள்கின்றோம் .

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : NLF/A/CSC//1/FA/2019/10

திகதி : 2020 ஜுன் 3ஆந் திகதி

தலைவர்,

இலங்கை கடற்றொழில் கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**இலங்கை கடற்றொழில் கடற்றொழில் கூட்டுதாபனத்தின் 2016 திசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்று சம்பந்தமாக 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) கூற்றின் பிரகாரம் கணக்காய்வு அதிபரின் அறிக்கை**

இலங்கை கடற்றொழில் கூட்டுதாபனத்தின் 2016 திசம்பர் 31ஆந் திகதிக்கான நிதி நிலைக்கூற்று, உரிமை மாற்ற கூற்றுக்கள், நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் சாராம்சம் அடங்கிய 2016 திசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்று 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தான சட்டத்தின் 29ஆம் பிரிவுடன் திருத்தங்களுடன் வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(1)ஆம் யாப்பில் அடங்கும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் வெளியிட வேண்டும் என நான் கருதும் எனது கருத்து வெளிப்பாடுகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக் கூற்று சம்பந்தமாக முகாமைத்துவத்தின் கடமைகள்

இந்த நிதிக் கூற்றை இலங்கை கணக்கியல் தர நிர்ணயத்துக்கு அமைய தயாரித்தல், நியாயமாக சமர்ப்பித்தல், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பெறுமானமிக்க பொய்யான கூற்றுக்களைத் தவிர்த்து நிதிக் கூற்றைத் தயாரிக்கத் தேவையான உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் கடமையாகும்.

### 1.3 கணக்காய்வு கடமைகள்

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்று சம்பந்தமான கருத்து வெளியிடுவது எனது கடமையாகும். என்னால் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு தர நிர்ணயத்துக்கு (ISSAI 1000 – 1810) ஏற்ப இலங்கை கணக்காய்வு தர நிர்ணயத்துக்கு அமைய இக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிக்கூற்று பெறுமானமிக்க பொய்யான கருத்துக்களைத் தவிர்த்துள்ளது என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கணக்காய்வு தர்மங்களின் தேவைகளுக்கு அமையவும் கணக்காய்வு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தரக்கட்டுப்பாடு எதிர்பார்ப்பாகும்.

நிதிக் கூற்றில் காணப்படும் பெறுமானங்கள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான கணக்காய்வு சாட்சிகள் பெற்றுக் கொள்ளும் முகமாக வழமையான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பெறுமானம் மிக்க பொய்யான கூற்றுக்களின் அவதானம் மதிப்பிடலும் கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையிலாகும். இந்த அவதானம் மதிப்பிடல்களின்போது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறையை திட்டமிடுவதற்கு கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றைத் தயாரிப்பதற்கு மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்க ஏற்புடைய உள்ளக நிர்வாகத்தை கணக்காய்வாளர் கவனத்திற் கொண்டபோதும் கூட்டுத்தாபனத்தின் உள்ளக நிர்வாகத்தின் வினைத் திறன் சம்பந்தமாக கருத்துக் கூறுவதற்கு எதிர்பார்க்கவில்லை. முகாமைத்துவம் பின்பற்றிய கணக்காய்வு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தினை மதிப்பிடல் மற்றும் நிதிக் கூற்றுக்களின் மொத்த சமர்ப்பிப்பு சம்பந்தமாக மதிப்பிடலும் கணக்காய்வில் உள்ளடங்கும். கணக்காய்வின் பாட விதானம் மற்றும் பெறுமானத்தை தீர்மானிப்பதற்கு 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13வது பிரிவின் (3) மற்றும் (4) உபபிரிவுகளால் கணக்காய்வு அதிபதிக்கு அபிமானமிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கணக்காய்வு கருத்துகளுக்கு அடிப்படை ஒன்றை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சிகள் பொருத்தமானவை மற்றும் போதுமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.4 பாதகமான கருத்துக்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களுக்கு ஒப்பிட்டு இருப்பின், பின் தொடர் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருந்த பெரும்பாலானவை அடிப்படை அம்சங்களுக்கு குறிப்பிடத்தக்களவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

## 2. நிதிக் கூற்று

### 2.1 பாதகமான கருத்து

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2016 திசம்பர் 31ஆந் திகதிக்கு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றுடன் நிறைவடையும் வருடத்துக்கான அதன் நிதி செயற்பாடுகள்

மற்றும் நிதிப் பாய்ச்சல் இலங்கை கணக்கியல் தர நிர்ணயத்துக்கு அமைய உண்மையானதாகவும், நியாயமானதாகவும் இல்லை என்பது எனது கருத்தாகும்.

### 2.2 நிதிக் கூற்று சம்பந்தமான கருத்துக் கூறல்.

### 2.2.1 இலங்கை கணக்கியல் தர நிர்ணயம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :

(i) இலங்கை கணக்கியல் தர நிர்ணய இலக்கம் 1இன் 32ஆம் பந்திக்கு அமைய செலவுகளுக்கு எதிரே வருமானமும் சொத்துகளுக்கு எதிரே பொறுப்புகளும் ஈடு செய்ய முடியாத போது முறையே ரூபா 362,539/- நிதி வருமனம் நிதி தேவைகளுக்கு எதிராகவும் ரூபா 17,949,853/- வரவு மீதி நடைமுறைச் சொத்துக்களுக்கு எதிராகவும் ஈடு செய்யப்பட்டு இருந்தது.

(ii) இலங்கை கணக்கியல் தர நிர்ணய இல. 07.

(அ) நிதிப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும்போது மீளாய்வு வருட பணத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டிய போதும் நிதி அடிப்படைக்கு மாறாக நீக்கப்பட்டுள்ளது.

(ஆ) சொத்து விற்பனை இலாபம் நடவடிக்கை செயற்பாடுகளில் இருந்து கழித்து காட்டப்பட வேண்டிய போதும் மீளாய்வு வருடத்தில் வாகனம் மற்றும் சேதமடைந்த பொருட்களின் விற்பனையின் மூலம் கிடைத்த ரூபா 4,310,037/- இலாபம் நடவடிக்கை செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்படாததோடு, அச்சொத்து விற்பனையின் மூலம் கிடைத்த ரூபா 7,854,564/- நிதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக ஈட்டிய இலாபம் ரூபா 4,310,037/- நிதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மத்துமாகல காணி மூலம் கிடைத்த ரூபா 1,822,195/- நட்ட ஈட்டுத் தொகை நிதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பதிவிடப்பட்டிருந்ததோடு, நடவடிக்கை செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதிப் பாய்ச்சலில் கழித்து காட்டப்படவில்லை.

(ஈ) தவணைக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்துக்கு மீளாய்வு வருடத்தில் 10,779,840/- செலுத்தப்பட்டிருந்த போதும் ரூபா 2,757,424/- மட்டும் நிதிப் பாய்ச்சல்

கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் பதியப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வு வருடத்தில் தவணைக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 6,250,000/- நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பதிவிடப்பட்டு இருந்தது.

(உ) மீளாய்வு வருடத்தில் விற்பனை நிலையம் நிர்மானிப்பதற்கு செலவிடப்பட்டரூபா 9,726,470/- நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பதிவிடுவதற்குப் பதிலாக ரூபா 10,670,403/- பண வரவு பாய்ச்சலாக காட்டப்படிருந்தது.

(ஊ) இலங்கை வங்கிக் கடன் மற்றும் இறக்குமதியான மீன்களுக்குப் பெற்றுக் கொண்ட கடன் மொத்தம் ரூபா 107,870,455/- செலுத்தப்பட்டிருந்த போதும் கடன் மீளச் செலுத்தலாக ரூபா 113,582,457/- நிதிப் பாய்சசல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் பதிவிடப்பட்டிருந்தது.

(iii) இலங்கை கணக்கியல் தர நிர்ணய இல. 12இல் 79ஆம் பந்திககு அமைய நிதிக் கூற்றில் காலங் கடந்த வருமான வரி சம்பந்தமாக வெளிப்படுத்தல் செய்யப்பட்டு இருக்கவில்லை.

(iv) இலங்கை கணக்கியல் தர நிர்ணய இல. 16இன் 41ஆம் பந்தியின் கீழ் மீளாய்வு வருடத்தில் இலாப கணக்குக்கு இனம் காணப்படவேண்டிய தேய்மானச் செலவு ரூபா 77,930,509/- ஆயினும் 2014ஆம் ஆண்டில் சொத்துக்கள் மறுமதிப்பீடு காரணமாக அசையாச் சொத்துக்களின் பெறுமதி காரணமாக அதிகரித்த பெறுமதியின் அடிப்படையில் தேய்மானம் ரூபா 45,328,628/- கழித்து மிகுதி ரூபா 32,601,799/- மட்டும் வருடத்தின் தேய்மான செலவாக இலாப கணக்கில் அடையாளமிடப்பட்டிருந்தது.

(v) இலங்கை கணக்கியல் தர நிர்ணய இல. 19இன் 120ஆம் பந்தியின்படி ஊழியர் பணிக்கொடை நிதியத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூல பொறுப்புகள் கணக்கு வருட இறுதியில் மீளக் கணிக்கும்போது இனம் காணப்பட்ட ரூபா 40,448,828/-வான ஆயுள் கணக்கு நட்டம் பிற வருமானத்தின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக மீளாய்வு வருட செலவாக நிர்வாக செலவின் கீழ் பதிவிடப்பட்டிருந்ததோடு மீளாய்வு வருடத்துக்கான ரூபா 5,432,304/- நிகழ்கால சேவைச் செலவு மற்றும் ரூபா 9,240,249/- வட்டிச் செலவென மேலும் பிற செலவின் கீழும் தவறாகப் பதிவிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கியல் கொள்கை

முன்னைய வருடங்களுக்கு சார்பாக ரூபா 37,629,527/- அடமான கணக்கிற்கு ஒதுக்கியிருந்தபோதும் மீளாய்வு வருடத்தில் வியாபார கடன் பட்டோரிடம் அடமான கணக்கிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்கியல் கொள்கையின் கீழ் இதற்கு வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கியல் குறைபாடுகள்

இதன்கீழ் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011ஆம் ஆண்டு நிறுவனத்துக்குச் சொந்தமாக இருந்த ரூபா 2,558,029/- விற்க்கான பொதித் தொகுதி ஒன்று ஊழியர் ஒருவரினால் மோசடி செய்யப்பட்டு இருந்ததோடு, இதற்குத் தேவையான நடவடிக்கை எதுவும் எடுகப்பட்டிருக்கவில்லை. மேலும் மோசடி செய்யப்பட்ட அப் பொதி 2016ஆம் ஆண்டு கையிருப்பில் உள்ளடக்கப் பட்டிருந்தது.

(ii) மீளாய்வு வருடத்தில் நிலையற்ற வருமான கூற்றில் மீண்டுவரும் செலவைத் தாங்குவதற்கு அரச அன்பளிப்பில் இருந்து ரூபா 865,733,754/- மீளாய்வு வருடத்தில் வருமானமாக இனம் காணப்பட்டு இருந்தபோதும், அந்த அரச அன்பளிப்பில் ரூபா 130,154,441/- முன்னைய வருடத்துக்கான செலவாக விடுவிப்பதற்காகவும், ரூபா 225,613,104/- உம் நீண்ட கால கடனாக விடுவிப்பதற்கும் மற்றும் ரூபா 19,867,583/- மீன் வழங்கல் கடனாளிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. பொறுப்புகளை விடுவிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த நிதியை மீண்டுவரும் செலவாக காட்டியமையால் அப்பெறுமானத்தில் மீளாய்வு வருடத்தில் இலாபம் அதிகமாகக் கட்டப்பட்டிருந்தது.

(iii) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்குச் செலுத்த வேண்டியிருந்த பங்களிப்பு நிலுவைத் தொகை மற்றும் மேலதிக நிதி உட்பட மொத்தம் ரூபா 200,025,442/-ஐ செலுத்துமாறு 2017 மார்ச் 23ஆந் திகதி மற்றும் 2018 செபதெம்பர் 3ஆந் திகதி அந்த நிறுவனங்களிலிருந்து கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு நிதிக் கூற்றுகளில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(iv) தலைமை அலுவலகம் மற்றும் நிறைவேற்றுத் தரங்களின் நடைமுறைக் கணக்குகள் மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு இருக்காத காரணத்தினால் 2016 திசம்பர் 31ஆந் திகதிக்கு சமனாகாத நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 24,775,216/- ஆகும்.

### 2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இதன் கீழ் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 திசம்பர் 31ஆந் திகதிக்கு ரூபா 208,540,613/- ஆன வர்த்தக கடன்பட்டோர் மீதியினுள் 2 வருடங்களுக்கு மேலான ரூபா 21,700,673/-வும், 5 வருடங்களுக்கு மேலான ரூபா 55,950,625/- உம் 10 வருடங்களுக்கு மேலான ரூபா 7,251,427/-வும் விபரிக்க முடியாத ரூபா 16,676,242/-வும் அடங்கியிருந்த போதும் இவை சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) ரூபா 205,401,508/- விற்க்கான வர்த்தக கடன்பட்டோர் மீதியினுள் 5 வருடங்களுக்கு மேலான ரூபா 17,912,348/- வும் 2 - 3 வருடங்களுக்குள் 73,310,603/- ரூபா மீதியும் தீர்க்கப்படாதிருந்தது.

### 2.2.5 கணக்காய்வுக்கு சாட்சிகள் இன்மை

ரூபா 328,207,284/- விற்க்கான கடனாளிகளின் மீதி 24க்கான ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அடிப்படை அட்டவணைகள் மற்றும் மொத்தம் ரூபா 2,146,366/-வுக்கான கையிருப்பு பெறுமதிக்கு ஏற்புடையதான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையினாலும் ரூபா 3,038,254,548/-க்குப் பெறுமதியான 464 ஜேரனல் குறிப்புகளுக்கான ஜேர்னல் வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டு இருக்காமையால் அந்த மீதிகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமற் போனது.

### 2.2.6 சட்டதிட்டங்களுக்கு முரணானவை

சட்டதிட்டங்களுக்கு முரணான பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன –

| சட்ட திட்டங்கள் | பெறுமதி (ரூபா) | முரண்பாடுகள் |
|---|---|---|
| (i) 1971ஆம் ஆண்டின் 385ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 16ஆம் பிரிவு | 74,130,374 | அரச கூட்டுத்தாபனங்கள் வங்கி அஸ்ரா வசதிகளின் உச்ச எல்லைக்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அனுமதியைப் |

| | | |
|---|---|---|
| | | பெற வேண்டியபோதும், அவ்வாறு அனுமதி பெறப்படவில்லை |
| (ii) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் வரிச் சட்டம் | | |
| 21ஆம் பிரிவு | 3,794,558 | பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் வரி அறிக்கை கால எல்லை நிறைவடைந்து வரும் மாதத்தின் இறுதி தினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் 3 கால பகுதிக்கான வரி அறிக்கைகள் முறையே 10 நாட்கள் 11 மாதங்கள் மற்றும் ஒரு வருடம் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| 26ஆம் பிரிவு | 4,936,312 | மாதாந்தம் பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி அடுத்த மாதம் 20ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதும் 10 மாதங்களுக்கான வரி தேசிய வருமான வரித் திணைக்களத்துக்கு செலுத்தப்பட வில்லை. |
| (iii) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க தேசிய வருமான வரிச் சட்டம் | | |
| 3(இ)ஆம் பிரிவு | 329,038 | மீளாய்வு நடப்பு வருடத்தில் வட்டி வருமானத்துக்கு வரி ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை |
| 106 ஆம் பிரிவு | | 2016/2017 மதிப்பீட்டு வருடத்திற்க்கான வருமான வரி அறிக்கை 2017 நவம்பர் 30ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வருமான வரி திணைககளத்துக்கு அனுப்ப வேண்டியபோதும், அந்த அறிக்கை கணக்காய்வு தினமான 2020 ஜனவரி 20ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. |
| 3(இ)ஆம் பிரிவு | 162,039 | 2016ஆம் ஆண்டுக்கான வரி செலுத்துதலுக்கான தினம் 23 |

| | | | |
|---|---|---|---|
| | | | லிருந்து 30 வரை தாமதமாகி இருந்தது |
| (iv) | 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் விசேட ஒழுங்குவிதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவு | 272,500 | 3 காலாண்டுகளுக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 272,500/- முத்திரைக் கட்டணம் செலுத்தல் தினம் 4 நாட்கள் முதல் 2 மாதங்களுக்கான 2 மாதங்கள் வரை தாமதமாகி இருந்தது. |
| (v) | 2009ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் விசேட ஒழுங்கு விதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவு | 18,103,648 | 2016ஆம் ஆண்டுக்கான வரிக் கணக்காய்வு மேற்கொள்ளும் தினம் வரை செலுத்தாமை காரணமாக ரூபா 7,766,672 தண்டப் பணமும் செலுத்த வேண்டி ஏற்பட்டது. |
| (vi) | 2013ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பொருளாதர சேவைக் கட்டணம் | 14,863,218 | 2016/2017 மதிப்பீட்டு வருடத்துக்கான பொருளாதார சேவை வரி மற்றும் செலுத்த வேண்டிய தண்டப் பணம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. |
| (vii) | | | i) 2016ஆம் ஆண்டின் நிதிக் கூற்று 2019 நவமபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன் 2017 மற்றும் 2018 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 ஜனவரி வரையும் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ii) 2016ஆம் ஆண்டுக்குரிய சுருக்கக் குறிப்பு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை. |

## 3. முகாமைத்துவ வினைத் திறண் இன்மை

மீளாய்வு வருடத்தில் பணிக் கொடைக் கொடுப்பனவு தாமதம் காரணமாக ஊழியர்களுக்கு ரூபா 2,891,330/- தண்டப் பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் போன்றவற்றிற்கான பங்களிப்பு த் தொகை தாமதம் காரணமாக ரூபா 45,073,809/- தண்டப் பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

ஒப்பம் :

டப்ளிவ்.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர்

## 2.2 நிதிக் கூற்று சம்பந்தமாக கருத்துக் கூறல்

### 2.2.1 இலங்கையில் கொள்கை

(i) நிதிச் செலவுகள் மற்றும் நிதி வரவுகள் தனித் தனியான வருமான கூற்றில் குறிப்பு இலக்கம் 17இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

கிடைக்க வேண்டிய கணக்குகளில் இருந்து கழித்த பின்னர் மோசமான கடன் மற்றும் அடமான கடன் மீதிகள் இம்முறையில் சமப்படுத்திக் காட்டி இருந்ததோடு, 2015 அடங்கலாக இதற்கு முன்னரும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளிலும் இதுபோன்ற சமப்படுத்தல் கணக்காய்வுக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன.

(ii) இலங்கை தர நிர்ணய இலக்கம் 7

அ) ஆ, இ, ஈ, உ, ஊ

ஏற்புடையன. ஏதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் கணக்கியல் தர நிர்ணய இலக்கம் 07க்கு அமைய நிதிப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீண்டும் நட்டத்தைக காட்டியதனால் வரி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதற்கு சிதைக்கப்பட்ட வரி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அடுத்த வருடத்தில் இதற்கான வெளிப்படுத்தல்களை செய்வோம்.

(iv) இவ்விடயம் சம்பந்தமாக 2014ஆம் ஆண்டு பதியப்பட்டு இருந்ததோடு இதற்கு முன்னர் இது சம்பந்தமாக கணக்காய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. இதன்படி மீளாய்வு வருடத்தில் சமப்படுத்தல் செய்யப்பட்டது. விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு சம்பந்தப்பட்ட சமப்படுத்தல்களை எதிர்கால நிதிக் கூற்றில் மேற்கொண்டு சொத்து தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சொத்து எதிர்பார்த்த பயன்பாட்டுக்கு பயன்படுத்திய மாதத்தை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

(v) ஆயுட் கால அறிக்கைக்கு அமைய வருமான கூற்றில் தீர்வாகக் காட்டியுள்ள பெறுமதி குறிப்பிட்ட வருடத்தில் கூட்டுத்தாபனம் செலவாக இனம் கண்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்கு முன்னைய வருடங்களிலும் 2016ஆம் ஆண்டில் சமப்படுத்தியது போன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக கணக்காய்வு விசாரணை சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்வரும் வருடங்களில் நிதிக் கூற்றில் சரியான சமப்படுத்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.2.2 கணக்கியல் கொள்கை

இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் கணக்கு வருடங்களில் தேவையான சமப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2.3 கணக்கியல் குறைபாடுகள்

(i) இது விடயமாக தற்போதைய முகாமைத்துவத்துக்கு அறிவுறுத்தி, மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட சமப்படுத்தல்களை கூட்டுத்தாபன கணக்கியல் கொள்கைகளுக்கு அமைய மேற்கொள்வதற்கு அவதானம் செலுத்தப்படும்.

(iii) கணக்கியல் தர நிர்ணயத்துக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு செலுத்த வேண்டிய மேலதிக நிதி சம்பந்தமாக தொழிலாளர் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதனால், இது சம்பந்தமான பொறுப்புகளை நிறுவனம் இனம் கண்டுள்ளது. தற்போது 2017ஆம் ஆண்டுக்கான இறுதித் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அதில் இப்பொறுப்புகளுக்கு சமப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

(iv) இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது. 2016ஆம் ஆண்டுக்கு முன் இருந்தே நடைமுறைக் கணக்ககளுக்கு இடையே நிலவும் வேறுபாடுகள் காரணமாக இந்த சமமான மீதி காட்டப்படுகின்றது. மீளாய்வு வருடத்துக்கான கொடுக்கல் வாங்கல்கள் மாதாந்தம் பரிசீலிக்கப்படுவதனால் வருடத்தினுள் கொடுக்கல் வாங்கல்களுக்கு இடையில் வேறுபாடுகள் இருக்கவில்லை.

### 2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

(i) இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது.
(ii) இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது.

### 2.2.5 கணக்காய்வுக்கு சாட்சிகள் இன்மை

இலங்கை கடற்றொழில் கூட்டுதாபனம் பல தசாப்த காலமாக லெஜரை சமகாலப்படுத்த பிரதான ஜேர்னலைப் பயன்படுத்தியது. லெஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பொருட்களுக்குமான ஜேர்னல் குறிப்பு அந்த பிரதான ஜேர்னலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சரி பார்த்துக்கொள்வதற்கு பரிசோதனை செய்து கொள்ளலாம். எவ்வாறாயினும் ஜேர்னல் வவுச்சர் தயாரிக்கும்போது 2020 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

### 2.2.6 சட்டதிட்டங்களுக்கு முரணானவை

(i) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடமிருந்த வங்கி அயிரா வசதிகளில் எவ்வித மாற்றமும் செய்யவோ அல்லது மேற்போக்கு செய்து (Upgrade) கொள்ளவோ நடவடிக்கை

எடுக்கப்படவில்லை. அயிரா வசதிகளைப் பெற்றுக் கொண்ட ஆரம்ப சந்தர்ப்பத்தில் (2019) சம்பந்தப்பட்ட அனுமதிகளை அப்போதிருந்த முகாமைத்துவத்தினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii), (iii), (vi), (v), (vi)

பொருளாதார மற்றும் சேவைக் கட்டணம் பெறுமதிசேர் மீதான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, உழைக்கும்போதே செலுத்தும் வரி மற்றும் முத்திரை கட்டணம் ஆகியவை யாப்பு அடிப்படையிலான பொடுப்பனவுகளை செய்வதற்கு கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடம் நிதிக்கான பலம் இல்லாத காரணத்தினால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் தாமதக்க கட்டணம் கணக்கிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் யாப்பு ரீதியிலான கொடுப்பனவுகளைத் தீர்க்கும் பொறுப்பு இந்த கூட்டுத்தாபனத்துக்கு இருப்பதனால் எதிர்காலத்தில் இதற்குப் பொருத்தமான திட்டமொன்றை வகுத்து கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இவ்வாறான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டமையால் வரி அறிக்கையை குறிப்பிட்ட திகதிக்கு சமர்ப்பிக்க தவறியுள்ளோம்.

நிதிப் பிரிவில் இறுதிக் கணக்கு சம்பந்தமாக குறிப்பிட்ட பொறுப்புக் கூறக்கூடிய அலுவலர் ஒருவர் தொடர்ச்சியாக இருக்காததோடு, பிரதி பொது முகாமையாளரினால் (நிதி) இருந்த மாதிரியை மாற்றி நிதிக் கூற்றை சமர்ப்பிக்க வேறு மாதிரி ஒன்றை அறிமுகப்படுத்தியபோதும் அவரும் சேவையை விட்டு சென்றமையால் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு முடியாது போனது. எனினும் 2020.09.10ஆந் திகதி முதல் புதிய பொது முகாமையாளர் ஒருவர் தனது கடமையை ஆரம்பித்ததோடு, அவர் மூலம் மிக விரைவில் இந்நிதிக் கூற்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சட்ட வரைவாக்கம் செய்யப்பட்ட 2016ஆம் ஆண்டுக்குள் உள்ளடக்க வேண்டிய 14(2)(சீ) கணக்ககாய்வு விசாரணை சம்பந்தமான பதில் விளக்க அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, பணிப்பாளர் சபையின் அனுமதிக்குப் பின்னர் துரிதமாக ஆண்டறிக்கை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் செயற்குழு மூலதனத்தில் உள்ள பிரச்சினைகள் காரணமாக சம்பந்தப்பட்ட யாப்பு ரீதியிலான கொடுப்பனவுகளை உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமற் போனது.

ධීවර හා ජලජ සම්පත් සංවර්ධන අමාත්‍යාංශය
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
Ministry of Fisheries & Aquatic Resources Development
CEYFISH
දුරකථනය / தொலைபேசி Chairman +94 11 2523689
+94 11 2540455
ලංකා ධීවර සංස්ථාව
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
CEYLON FISHERIES CORPORATION
ෆැක්ස් අංකය / தொலை நகல் / Fax No. +94 11 2523385

මගේ අංකය / என் இல. CFC/FD/AUD/2016 ඔබේ අංකය / உங்கள் இல. දිනය / தினம் / Date 2021.01.20

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி தினைக்கலம்,
பொல்தூவ பாதை,
பத்தரமுள்ளை.

அய்யா அவர்களே,

**இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதி கூற்றுக்கள் பற்றி 1971 இலக்கம் 38 ஆன நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அறிக்கை.**

உமது இலக்கம் எப்எல்எஸ்/ஏ/சீஎப்சீ/1/எப்ஏ/2019/10 மற்றும் 2020.06.03 திகதியிட்டு எமக்கு அனுப்பப்பட்ட சுற்றரிக்கை கணக்கேட்புத் அறிக்கயின் குறிப்பிட்டவைகலை பற்றி எம் கருத்துக்களும் கண்கானிப்புகளும் உள்ளடக்கிய அறிக்கையை இத்தோடு சமர்பிர்கிறேன்.

இப்படிக்கு
விசுவாஷமுள்ள,

மேஜர் ஜெனரால் எஸ்.டப்ளிவு.எல்.தவுலுகல (ஓய்வுபெற்ற)
தலைவர்
இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்

## 2.2 நிதிக் கூற்று சம்பந்தமாக கருத்துக் கூறல்

### 2.2.1 இலங்கையில் கொள்கை

(vi) நிதிச் செலவுகள் மற்றும் நிதி வரவுகள் தனித் தனியான வருமான கூற்றில் குறிப்பு இலக்கம் 17இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

கிடைக்க வேண்டிய கணக்குகளில் இருந்து கழித்த பின்னர் மோசமான கடன் மற்றும் அடமான கடன் மீதிகள் இம்முறையில் சமப்படுத்திக் காட்டி இருந்ததோடு, 2015 அடங்கலாக இதற்கு முன்னரும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளிலும் இதுபோன்ற சமப்படுத்தல் கணக்காய்வுக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன.

(vii) இலங்கை தர நிர்ணய இலக்கம் 7

அ) ஆ, இ, ஈ, உ, ஊ

ஏற்புடையன. ஏதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் கணக்கியல் தர நிர்ணய இலக்கம் 07க்கு அமைய நிதிப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(viii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீண்டும் நட்டத்தைக காட்டியதனால் வரி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதற்கு சிதைக்கப்பட்ட வரி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அடுத்த வருடத்தில் இதற்கான வெளிப்படுத்தல்களை செய்வோம்.

(ix) இவ்விடயம் சம்பந்தமாக 2014ஆம் ஆண்டு பதியப்பட்டு இருந்ததோடு இதற்கு முன்னர் இது சம்பந்தமாக கணக்காய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. இதன்படி மீளாய்வு வருடத்தில் சமப்படுத்தல் செய்யப்பட்டது. விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு சம்பந்தப்பட்ட சமப்படுத்தல்களை எதிர்கால நிதிக் கூற்றில் மேற்கொண்டு சொத்து தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சொத்து எதிர்பார்த்த பயன்பாட்டுக்கு பயன்படுத்திய மாதத்தை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

